අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +941 12784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/1/27/15/01/2022 ඔබේ අංකය / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2022.04.05

அனைத்து தேசிய பாடசாலை அதிபர்களுக்கும்,

**2022 தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தல்.**

01. 2022 வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் கீழ் தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களது இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலையூடாக கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய நிகழ்நிலை முறைமையூடாக ஆசிரியர் இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய கீழ் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அதன்படி இந்த இடமாற்றங்கள் யாவும் பிரதானமாக 02 வகைகளைக் கொண்டவையாகும்.

1.1 **முதலாம் வகை**

**தற்போது தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் 10 வருட சேவைக்காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் கட்டாய இடமாற்றம்.**

- 2021.12.31 திகதி அல்லது அதற்கு முன்னர் தற்போது சேவையாற்றும் பாடசாலையில் 10 வருட சேவைக்காலத்தை நிறைவுசெய்துள்ள ஆசிரியர்கள் அனைவரும் இந்த வருடாந்த இடமாற்ற செயன்முறையினுள் கட்டாயமாக உள்ளடக்கப்படுவர். அவ்வாறான சகல ஆசிரியர்களும் https://nstt.moe.gov.lk எனும் இணைப்பினூடாக ஆசிரியர் இடமாற்றத்திற்காக விண்ணப்பித்து அதன் அச்சுப் பிரதியை பெற்று அதனை அதிபரிடம் கையளிக்க வேண்டும். **நிகழ்நிலையூடாக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை 2022/04/17 முதல் 2022/04/30ம் திகதி வரையாகும்.**

- தனிப்பட்ட தேவைகள் கருதி பெற்றுக்கொண்ட தற்காலிக இணைப்பு, தனிப்பட்ட தேவைகள் கருதி பெற்றுக்கொண்ட உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளத்துடனான/ சம்பளமற்ற விடுமுறைகள் போன்றன தற்போது சம்பளம் பெறும் பாடசாலையின் சேவைக்காலத்தினுள் உள்ளடக்கப்பட்டு கணிப்பிடப்படும்.

- **10 வருட சேவைக்காலத்தை நிறைவுசெய்த சகல ஆசிரியர்களதும் பூரணப்படுத்தப்பட்ட இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களுடன்** ஆசிரியர்களது பெயர்ப்பட்டியலையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள TTB/2022 மாதிரிப்படிவத்திற்கமைய தயாரித்தல் வேண்டும்.

- **10 வருட சேவைக்காலம் நிறைவடைந்துள்ளமை காரணமாக இடமாற்றத்திற்குள்ளாகும் எவரேனும் ஒரு ஆசிரியர் உரிய திகதிக்கு உரிய விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதிபரிடம் கையளிக்கவில்லையெனின் TTB/10/2022 உப ஆவணத்தில் அவர்களது பெயர் மற்றும் அதிபரின் பரிந்துரையையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்க வேண்டும். இவ் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இடமாற்ற சபையினால் அவ்வாசிரியர்களது இடமாற்றம் மேற்கொள்ளப்படும்.**

1.2 **இரண்டாம் வகை – வருடாந்த இடமாற்றம்**

- முதல் வகைக்குரிய, அதாவது கட்டாய ஆசிரியர் இடமாற்றத்திற்கு உட்படாத, ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு குறைவான காலம் சேவையாற்றியுள்ள ஆசிரியர்களும் தமது இடமாற்றக் கோரிக்கைகளை முன்வைக்க முடியும். அவ்வாறான ஆசிரியர்களும் https://nstt.moe.gov.lk எனும் இணையத்தள இணைப்பினூடாக விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையூடாக நிரப்பி அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பாடசாலை அதிபரிடம் கையளித்தல் வேண்டும். **நிகழ்நிலையூடாக விண்ணப்பிக்கவேண்டிய கால எல்லை 2022/04/17 முதல் 2022/04/30ம் திகதி வரையிலாகும்.**

- அவ்வாறாக விண்ணப்பிக்கும் சகல ஆசிரியர்களது விபரங்களையும் **TTB/2022** மாதிரிப் படிவத்தில் குறிப்பிடல் வேண்டும்.

- **நிகழ்நிலையூடாக அனுப்பிவைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை தவிர வேறு விண்ணப்பப்படிவங்களை அமைச்சுக்கு நேரடியாக அனுப்புவதோ அல்லது வேறு எந்தவொரு மாதிரிப் படிவத்தை உபயோகித்தோ அனுப்பப்படாதிருப்பதை** அதிபர் உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.

**02.** ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும் போது அதிபர்கள் கீழெ குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைவாக செயற்படல் வேண்டும்.

1. விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கவேண்டிய இறுதித் திகதிக்கு முன்னர் நிகழ்நிலையூடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பக்கூடிய வகையில் ஆசிரியர்களை அறியப்படுத்துதல் மற்றும் இணையத்துடனான கணணி வசதிகளை ஏற்பாடு செய்துகொள்ளல் மற்றும் தானே விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் கையொப்பமிட்டு அதிபரிடம் கையளிக்கவேண்டும் என ஆசிரியர்களை அறிவுறுத்த வேண்டும்.

2. இடமாற்றக் கோரிக்கைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது **<u>ஆலோசனைப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக ஆவணங்களான;</u>**

(i) ஆசிரியரின் நியமனக் கடிதத்தின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
(ii) தற்போதைய சேவை நிலைத்திற்கு இடமாற்றம் பெற்றுக்கொண்டமைக்கான கடிதத்தின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி,
(iii) கற்பிக்கும் கால அட்டவணையின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

ஆகியன இணைக்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தி அவ் விண்ணப்பப்படிவங்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பும் பொறுப்பு அதிபரையே சாரும்.

**03.** அதிபரால் 10 வருடங்களை நிறைவு செய்த ஆசிரியர்களதும் வருடாந்த இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களதும் விண்ணப்பப்படிவங்களில் அதிபர் நிரப்பவேண்டிய பகுதியை தெளிவாக நிரப்பி தனது கையெழுத்தையிட்டு தேவையான உப ஆவணங்களையும் ஒன்றிணைத்து அனைத்தையும் ஒரேயடியாக கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**04.** அதிபர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது அனுப்பிவைக்கப்படவேண்டிய உப ஆவணங்கள்.

(i) **TTB/2022** உப ஆவணம் - விண்ணப்பிக்கும் சகல ஆசிரியர்களது விபரங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். அவ் ஆசிரியர்கள் தங்களது பாடசாலையில் 2021.12.31ம் திகதிக்கு சேவைக்காலம், ஓய்வுபெறும் திகதி, விடுமுறை பெற்றிருப்பின் அதற்கான காரணம், ஆரம்ப வகுப்புக்களுக்கு கற்பிப்பவராயின் எந்த வகுப்பிற்கு கற்பிக்கின்றார் போன்ற விடயங்களை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) **TTB/10/2022** உப ஆவணம் - **<u>தங்களது பாடசாலையில் சேவையாற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தையுடைய விண்ணப்பித்த மற்றும் விண்ணப்பிக்காத சகல ஆசிரியர்களதும்</u>** விபரங்களை, 2021.12.31ம் திகதிக்கு தங்களது பாடசாலையில் சேவைக்காலம் மற்றும் தங்களது பரிந்துரையை தெளிவாக நிரப்பி அனுப்பிவைத்தல் வேண்டும். **<u>அதிபரின் பரிந்துரைக்கமைவாக விண்ணப்பிக்காத ஆசிரியர்களுக்கும் இடமாற்ற சபையினூடாக இடமாற்றம் வழங்கப்படும்</u>**

**05.** 2022 ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக **<u>ஆசிரியர்களுக்குரிய ஆலோசனைப் படிவம்</u> இத்துடன் அனுப்பப்படுவதுடன். அப் படிவத்தை தங்களது பாடசாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தவேண்டும். (இவ் விடயம் தொடர்பாக ஆசிரியர்களை அறியப்படுத்தி சம்பவப் பதிவுப் புத்தகத்தில் பதிவொன்றையும் இடுதல் வேண்டும்.)**

**06.** **<u>சகல விண்ணப்பப்படிவங்களும் 2022/05/20ம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைகள் ஆசிரியர் இடமாற்றக் கிளை, முதலாம் மாடி, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை</u>** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான **<u>2022/05/20ம் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக ஏற்படக் கூடிய முரண்பாடுகளுக்கு பாடசாலை அதிபரே பொறுப்புக் கூறவேண்டும்</u>**.

**07.** எவரேனும் ஒரு ஆசிரியர் **<u>மாகாண பாடசாலைகளுக்கு இடமாற்றம் கோருவதாயின், விண்ணப்பப்படிவங்களை 04 பிரதிகளுடன்</u>** சமர்ப்பித்தல் வேண்டும்.

**08.** மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் 011-2784434 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது director.tt@emis.moe.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாக தொடர்புகொள்ளலாம்.

**பேராசிரியர் கே. கபில. சீ. கே பெரேரா**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் — ✆ +94112784832, 🖷 +94112784825
ලේකම් / செயலாளர் — ✆ +94112784811, 🖷 +94112785162

# தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்ற விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கான ஆலோசனைகள்

விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றவும்.

**விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய பொது நிபந்தனைகள்**

- ❖ **விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்றாக வாசித்து புரிந்துகொள்ளவும்.**
- ❖ **தற்போதைய பாடசாலையில் சேவைக்காலம் 10 வருடங்களை விட அதிகம் எனின் கட்டாயமாக இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.**
- ❖ **விண்ணப்பப்படிவம் ஆசிரியராலேயே பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இதற்காக வெளித் தரப்பினரை தொடர்புபடுத்திக்கொள்ளலாகாது.**
- ❖ **விண்ணப்பித்து முடிந்ததன் பின்னர் (Submit) செய்ததன் பின்னர் மீண்டும் திருத்தங்களேதும் மேற்கொள்ள முடியாது என்பதனால் பதிவிடப்பட்ட விடயங்கள் சரியானவை என உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் (Submit) செய்யவேண்டும்.**

**1.** விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் உங்களது மொழி மூலத்திற்குரிய ஆலோசனைப் படிவத்தை நன்றாக வாசித்து புரிந்துகொள்ளவும். அதன் பின்னர் திரையிலுள்ள ■ **I have read and understood the guidelines above** இல் வெற்றுப் பெட்டி மீது Click செய்யவும்.

**2.** உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை சரியாக உட்செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளவும். (உங்களது தற்போதைய அடையாள அட்டை இலக்கத்தை உட்செலுத்தவும். முன்னோக்கிச் செல்ல முடியவில்லையெனின், உங்களது பழைய அடையாள அட்டை இலக்கத்தை உட்செலுத்தி மீண்டும் முயற்சிக்கவும்.) இதன்போது நிகழ்நிலை இடமாற்ற விண்ணப்பப்படிவம் திரையில் தெரியும்.

**3.** அதற்கமைய நிகழ்நிலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது கீழ்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றவும்.

**விண்ணப்பப்படிவத்தின் இல. 1 முதல் 7 வரையில் (Basic Information)**

**4.** உங்களது தனிப்பட்ட தகவல்கள் சரியானவையா என பரீட்சிக்கவும். ஏதும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனின் அத் தகவலுக்கு எதிரே உள்ள செம்மஞ்சல் நிற Edit பொத்தானை click செய்து சரியான தகவல்களை உட்செலுத்தவும்.

**5.** தொடரிலக்கம் 3.2 இல் உங்களது மொழிமூலத்திற்கமைய பெயரைக் குறிப்பிடவும். (உ_ம்:- ஏ,பீ,சீ பெரேரா)

**6.** தொடரிலக்கம் 05 இல் சரியான தரவுகளை உட்செலுத்தியதும் தொடரிலக்கம் 5.1 தானியங்கி முறையில் பூரணப்படுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவத்தின் இல. 8 முதல் 12 வரையில் (Service information)**

**7.** உங்களது சேவை தொடர்பான விபரங்களை சரிபார்த்துக்கொள்ளவும். ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனின், அதற்குரிய தகவல்களுக்கு எதிரேயுள்ள செம்மஞ்சல் நிற Edit பொத்தானின் மீது click செய்து சரியான சேவை விபரங்களை உட்செலுத்தவும் அல்லது தெரிவுசெய்யவும்.

**8.** தற்போது தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டு வேறு பாடசாலையொன்றில் அல்லது நிறுவனமொன்றில் பணியாற்றின் தொடரிலக்கம் 9 ற்கு எதிரேயுள்ள பெட்டியின் மீது click செய்து அதற்குரிய விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டதும் அதற்கேற்றவாறு உங்களது தகவல்களை உட்செலுத்தவும்.

**9.** தொடரிலக்கம் 10.1 இல் தரவுகளை சரியாக உட்செலுத்தியதும் இலக்கம் 10.2 தானியங்கி முறையில் பூரணப்படுத்தப்படும்.

**10.** தொடரிலக்கம் 11.1 இல் தரவுகளை சரியாக உட்செலுத்தியதும் இலக்கம் 11.2 தானியங்கி முறையில் பூரணப்படுத்தப்படும்.

**11.** தொடரிலக்கம் 12 இல் உங்களுக்கு சேவை நிலையம் ஒன்றை சேர்த்துக்கொள்ள வேண்டுமெனின், உரிய விபரங்களை உட்செலுத்தி **Add row** மீது click செய்யவும்.

**12.** இல. 12 இல் தானியங்கி முறையில் காட்சிப்படுத்தப்படும் தகவல்களில் மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டுமெனின், விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் உள்ள இல. 20இல் திருத்தப்படவேண்டிய முறையைக் குறிப்பிடவும்

**விண்ணப்பப்படிவத்தின் இல. 13 முதல் 17 வரையில் (Subject Information)**

**13.** இலக்கம் 13 இல் உங்களது நியமனப் பாடம் தொடர்பான தகவல்களை சரிபார்த்துக்கொள்ளவும். ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனின் அத் தகவலுக்கு எதிரேயுள்ள செம்மஞ்சல் நிற Edit பொத்தானின் மீது click செய்து உங்களது பாடம் தொடர்பான விபரங்களை சரியாக உட்செலுத்தவும்

**14.** இல. 14 இல் தாங்கள் தற்போது பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடும் பாடம் தொடர்பான விபரங்களைத் தெரிவுசெய்யவும்,

**15.** இல. 15 மற்றும் 16 இல் சகல பகுதிகளுக்கும் பதில்களை உட்செலுத்தவும் அல்லது தெரிவுசெய்யவும்.

**16.** இல. 17 இல் நியமனப் பாடம் மற்றும் கற்பிக்கும் பாடம் தவிர்த்து வேறுபாடங்களை கற்பிக்கக்கூடிய தகைமைகள் காணப்படின் அதனைத் தெரிவுசெய்யவும்,

**17.** நீங்கள் உட்செலுத்தும் பாடங்களுக்குரிய மொழிமூலங்களை சரியாகத் தெரிவுசெய்வதில் அவதானம் செலுத்தவும்.

**18.** நீங்கள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ஒருவரெனின், தொடர் இல. 14 இல் **Primary** Select செய்ததன் பின்னர் 14.4 **Grade** இல் தாங்கள் 2022 கல்வியாண்டில் கற்பிக்கும் தரத்தைத் தெரிவுசெய்யவும்

**விண்ணப்பப்படிவத்தின் இல. 18 முதல் 20 வரையில் (Transfer Request)**

**19.** இல. 18 இல் தாங்கள் இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் வகைகள் 03 இலிருந்து 01 ஐ தெரிவுசெய்யவும். அவை கீழ்வருமாறு,

**19.1.** தேசிய பாடசாலையொன்றிலிருந்து தேசிய பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிப்பவராயின்,

**19.1.1.** உரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் 05 பாடசாலைகளைப் பெயரிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். 03 பாடசாலைகளையேனும் குறிப்பிடுவது கட்டாயமாகும். (பாடசாலையின் பெயரை Search செய்வதனூடாக பாடசாலையைத் தெரிவுசெய்துகொள்ள முடியும்). இடமாற்றம் வழங்கும்போது கோரப்பட்டுள்ள பாடசாலை விருப்பு வரிசை கருத்தில் கொள்ளப்படும்.

**19.2.** தேசிய பாடசாலையொன்றிலிருந்து மாகாணப் பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிப்பவராயின்,

**19.2.1.** உரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் மாகாணம் மற்றும் அம்மாகாணத்திலுள்ள உரிய மாகாண பாடசாலையை உட்செலுத்தவும். மாகாணம் மற்றும் இடமாற்றம் கோரும் பாடசாலைகளை குறிப்பிடுவதற்கு 05 சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். (பாடசாலையின் பெயரை Search செய்வதனூடாக பாடசாலையைத் தெரிவுசெய்ய முடியும்.) 03 பாடசாலைகளைக் குறிப்பிடுவது கட்டாயமாகும். இடமாற்றம் வழங்கப்படும் பாடசாலை தொடர்பாக உரிய பாடசாலை அமைந்துள்ள மாகாணத்திற்குரிய கல்விப் பணிப்பாளரால் தீர்மானிக்கப்பவும்.

**19.3.** தேசிய பாடசாலையொன்றிலிருந்து தேசிய பாடசாலையொன்றிற்கு அல்லது தேசிய பாடசாலையொன்றிலிருந்து மாகாணப் பாடசாலையொன்றிற்கு எனும் இரு சந்தப்பங்களையும் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் ஆசிரியர் ஒருவரெனின்.

**19.3.1.** உரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் 05 தேசிய பாடசாலைகள் மற்றும் 05 மாகாணப் பாடசாலைகளை பெயரிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். (பாடசாலையின் பெயரை Search செய்வதனூடாக பாடசாலையை தெரிவுசெய்யலாம்.) 03 தேசிய பாடசாலைகளையும் 03 மாகாணப் பாடசாலைகளையும் குறிப்பிடுவது கட்டாயமாகும். இடமாற்றம் வழங்கப்படும்போது தேசிய பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் கோரப்பட்டுள்ள பாடசாலை விருப்பு வரிசையும் கருத்திள் கொள்ளப்படும். மாகாண பாடசாலைகள் வழங்கப்படுவது தொடர்பாக உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் திர்மானிக்கப்படும்.

**20.** இல. 19 இல் நீங்கள் இடமாற்றம் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதற்கான காரணத்தை சரியாகத் தெரிவுசெய்யவும்.

**21.** இல. 20 இல், விண்ணப்பப்படிவத்தில் நீங்கள் வழங்கிய தகவல்களுக்கு மேலதிகமாக ஏதேனும் குறிப்பிடப்படவேண்டுமெனின் அதனை மிகவும் சுருக்கமாக குறிப்பிடவும். இதனை உங்களுக்கு இலகுவான மொழியில் குறிப்பிடலாம். அவ்வாறே இல. 12 இல் தானியங்கி முறையில் காட்சிப்படுத்தப்படும் சேவை பற்றி விபரங்களில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டின் அவை தொடர்பாகவும் இங்கு குறிப்பிடவும்.

**22.** தாங்கள் வழங்கிய தகவல் அனைத்தும் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் உரிய பெட்டியில் Click செய்ததன் பின்னர் விண்ணப்பப்படிவத்தை (Submit) செய்யலாம்.

**23.** அதன் பின்னர் **Your Teacher Transfer Application Successfully Submitted** எனத் திரையில் தோன்றியதும் அதற்கு கீழாக உள்ள **Download Application** என்பதை Click செய்து உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்துகொள்ளல் வேண்டும்.

**24.** அவ் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று அதில் இல. 19 இல் திகதி மற்றும் கையொப்பத்தையிட்டு பாடசாலை அதிபரிடம் விண்ணப்ப இறுதித் திகதிக்கு முன்னர் தானே கையளிக்க வேண்டும். இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கவேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு,

i. நியமனக் கடிதத்தின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

ii. இறுதியாக உங்களுக்கு வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றக் கடிதத்தின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

iii. அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கால அட்டவணையின் பிரதி

**க.கொ – இடமாற்றம் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பது தேசிய பாடசாலையொன்றிலிருந்து இன்னொரு தேசிய பாடசாலைக்கு எனின் சகல ஆவணங்களும் இணைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியும்;**

**இடமாற்றம் பெற்றுக்கொள்ள உத்தேசிப்பது தேசிய பாடசாலையிலிருந்து மாகாண பாடசாலையொன்றிற்கு எனின் மேற்கூறிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பப்படிவங்களின் 04 தொகுதிகளையும்; அதிபரிடம் கையளித்தல் வேண்டும்.**

25. பொது விடயங்கள் -

- ஒரு தடவை மாத்திரமே விண்ணப்படிவத்தை பூரணப்படுத்தி (Submit) செய்யலாம்.
- விண்ணப்பப்படிவத்தை (Submit) செய்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் அச்சுப் பிரதியில் ஏதேனும் பிழைகள் காணப்படின் அவ் அச்சுப் பிரதியிலேயே அதற்குரிய திருத்தத்தை மேற்கொண்டு குருங்கையொப்பத்தையிட்டு அதிபரிம் ஒப்படைக்கவும்.
- விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தும்போது மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் பிரச்சனைகள் காணப்படின் உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், சம்பளம் பெற்றுக்கொள்ளும் பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி, தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் பிரச்சனை ஆகியனவற்றை director.tt@emis.moe.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். (மின்னஞ்சலின் SUBJECT இல் தாங்கள் சம்பளம் பெறும் பாடசாலைக்குரிய மாவட்டத்தைக் குறிப்பிடவும்.) இல்லாவிடின் 011 – 2784434 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தரவும்.

**பேராசிரியர் கே. கபில. சீ. கே பெரேரா**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**